பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை 12.10.2025 கதிர் 336

## இனி இது ரகசியம் அல்ல!

மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
ஆளும்தரப்பான ☞2

# வடக்கில் குற்றங்களை கட்டுப்படுத்த பொலிசாரின் ஒத்துழைப்புப் போதாது

## மாவட்டச் செயலர்கள் சுட்டிக்காட்டு

வடக்கு மாகா ணத்தில் திட்டமிட்ட குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள அதிகரித்துள்ள போதும் அவற்றைக் கட்டுப்படுத்து வ தற்குப்பொலிஸாரின்ஒத்துழைப்புபோதாதுஎன மாவட்டசெயலாளர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், வடக்கு மாகாணத்துக்குரிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், அனைத்து பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கும் வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள் மற்றும் ஆளுநர் இடையிலான



கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மணல் அகழ்வு, கசிப்பு ☞2

# பெலியத்த சனா – ஜேவிபியினர் தொடர்பு பொய்யென தெரிந்தே சொன்னார் விமல்

## தங்காலைப் பொலிஸார் தகவல்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னனியின் தலைவருமான விமல் வீரவன்ச, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 'பெலியத்தே சனா' தொடர்பில் பெ ய்யென அறிந்தும் ஊடகங்களில் உறுதிப்படுத்தப்படாத தகவலை வெளிப்படுத்தினார் எனத் தங்காலை குற்றவிசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 'பெலியத்தே சனா தொடர்பான விடங்களை ஊடகங்களில் வெளிப்படுத்தியிருந்த முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச தங்காலைகுற்றவிசாரணைப்பிரிவால் விடுக்கப்பட்டிருந்தஅழைப்பாணையின் பேரில் வாக்குமூலம் அளிப்பதற்காக வியாழக்கிழமை அன்று தங்காலை குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போதுதங்காலைசீனிமோதர மற்றும் கொடெல்லாவ பகுதியில் செப்டம்பர் 22 ஆம் திகதி 700 கிலோ கிராமுக்கும் அதிகளவான போதைப்பொருள் மீட்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பில் விமல் வீரவன்சவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாக்குமூலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார் எனத் தங்காலைப் பொலிஸார் தெரிவித்திருப்பதாவது:

வீரசிங்க சரத், அல்லது பெலியத்தே சனா அல்லது புவக்தண்டாவே சனா என ☞2

# 2000 இந்திய வீடுகளுக்கான ஆவணக் கையளிப்பு இன்று

இந்திய ஆளும்தரப்பின் நிதி உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 10,000 வீட்டுத்திட்டத்தின் நான்காவது கட்டத்தின் கீழ், 2000 பயனாளிகளுக்கு வீட்டு உரித்துக்கான ஆவணம் வழங்கும் நிகழ்வு அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை, பதுளை - பண்டாரவளை பொது மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயராணையர் ☞2

# காரைதீவு இராணுவ முகாம் 38 ஆண்டுகளின் பின் அகற்றம்

## காணிகள், கட்டடங்கள் கையளிப்பு

(சகா தேவராஜா)

காரைதீவு முதன்மை வீதியில் 38 வருடங்களாக நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் வெள்ளிக்கிழமை மாலை முற்றாக மூடப்பட்டது. அங்கிருந்த காரைதீவு பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் மற்றும் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்கள் காணிகள் உரியவர்களிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டன.





இராணுவத்தின் கல்முனை கட்டளைத் தளபதி அதற்கான உரிய ஆவணங்களை ☞2

# இருப்பது இலங்கை பொலிஸா அல்லது ஜே.வி.பி. பொலிஸா?

## விமல் வீரவன்ஸ கோபாவேசம்



இலங்கையில் தற்போதுள்ளது ஸ்ரீ லங்கா பொலிஸா அல்லது ஜேவிபியின் பொலிஸா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. அவ்வளவு கீழ்த்தரமான முறையில் பொலிஸார் செயற்படுகின்றனர். எதிர்க்கட்சிகளுக்கு எதிரான ஆளும்தரப்பின் அடக்குமுறைகளின் பிரதானியாகவே பொலிஸ் மா அதிபர் செயற்படுகிறார். எனதுவாக்குமூலத்தில்வழங்கப்பட்டவிடயங்களை பொலிஸ் திணைக்களம் வெளிப்படுத்தியமை வன்மையாக்கக கண்டிக்கத்தக்கது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்திலுள்ளவற்றை ஊடகங்களுக்குபொலிஸ்திணைக்களம்பகிரங்கப்படுத்தியுள்ளமை இதுவே முதன்முறையாகும். தண்டனைச் சட்டக்கோவையின் 110(3) பிரகாரம் பொலிஸாருக்கு வழங்கும் வாக்குமூலத்தின் இரகசியம் பாதுகாக்கப்படவேண்டும்.

இலங்கையில் உள்ளது ஸ்ரீ லங்கா பொலிஸா ☞2

# நைஜீரிய நாட்டை சேர்ந்தவர் யாழ். நாவற்குழியில் கைது

நைஜிரியாவைசேர்ந்தஒருவர்யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றார். விசா இன்றி நாவற்குழி பகுதியில் இவர் தங்கி இருந்தார் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிசாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

என்.பி.பிக்கும் ஜேவிபிக்கும் இது தொடர்பில் நடந்த உயர் மட்டப் பேச்சுக்களில் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதாக நம்பகரமாக அறிய முடிகிறது.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்த இந்த இரு தரப்புக்களுக்கும் இடையில் நடந்த ஒரு சந்திப்பில் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தி முடிப்பது என்ற இரு தரப்புக்களும் இணங்கின. அடுத்த சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்று இந்தச் சந்திப்பில் திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அதனடிப்படையில் மார்ச் மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும்தரப்பு தயார்படுத்தல்களைத் தொடங்கியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு நாட்டுக்குள் எதிர்க் கட்சிகள் அதிகளவில் குரல் கொடுப்பதோ, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா இந்தத் தேர்தலுக்காகக் குரல் கொடுத்ததோ மட்டும் இதற்குக் காரணமில்லை. தேர்தலில் தங்களைத் தோற்கடிக்கக் கூடியளவிற்கு எதிர்க் கட்சிகள் பலம்பெறாத இந்தக் காலமே சிறந்தது என்பதும் அடுத்தடுத்த வருடங்களில் பன்னாட்டு நாணய நிதியத்தின் அறிவுரைப்படி மேலும் இக்கட்டான ஆளும்தரப்பின் புகழை மங்கச் செய்யும் பல முடிவுகளைச் செயற்படுத்த வேண்டியிருப்பதுமே அதற்கான காரணங்கள். இவை தொடர்பில் மிகத் தெளிவாக ஆராய்ந்த பின்னரே மார்ச்சில் தேர்தல் என்கிற இலக்கை நோக்கி ஆளும்தரப்பு நகரத் தொடங்கியிருக்கிறது.

பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் முன்வைக்கப்பட்ட திட்டங்களின்படி, அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் ஆளும்தரப்பு மிகக் கடுமையான முடிவுகளைச் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. குறிப்பாக, அரசாங்கம் பல அரசு நிறுவனங்களை தனியார்மயமாக்கவும், சிலவற்றை மூடவும், அரசு செலவினங்களை வெகுவாகக் குறைக்கவும் கட்டாயப்படுத்தப்படும். இந்தக் கொள்கைகளைச் செயல்படுத்துவது தவிர்க்க முடியாமல் வலுவான பொது எதிர்ப்பைத் தூண்டும் என்று அது நம்புகிறது.

அப்படியான ஒரு நிலமை ஏற்பட்டு அது எதிர்க் கட்சிகளுக்குச் சாதமான அரசியல் சூழலைத் தோற்றுவிப்பதற்கு முன்பாக மாகாண சபைத் தேர்தலை நடத்தி தமது ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வோம் என்பதே ஆளும்தரப்பினதும் ஜேவிபியின் திட்டம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## வடக்கில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி, கால்நடை கடத்தல், குழுச் சண்டை போன்றவை அதிகரித்துள்ளன என்பது மாவட்டச்செயலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இவை தொடர்பாக முறைப்பாடுகள் மற்றும் ஆதாரங்கள் பொலிசாருக்கு வழங்கப்பட்டாலும் சில வேளைகளில் அசமந்த போக்குடன் பொலிசார் நடந்துகொள்கின்றமையால் இவற்றை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் குற்றங்களைக் கட்டுப்படுத்த, யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மண்டைத்தீவுச் சந்தி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி ஆகிய இடங்களில் பொலிஸ் காவலரணங்கள் அமைக்கப்படவேண்டும் என யாழ். மாவட்டச்செயலர் வலியுறுத்தினார்.

ஒலிபெருக்கிபாவனைக்கான அனுமதியை வழங்கிக் கட்டணம் அறவிடும் பொலிஸார், அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படும்போது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பையும் கொண்டிருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

மன்னார் மாவட்டத்தில், பெண் பொலிஸாரின் பற்றாக்குறை, சட்டவிரோத மணல் அகழ்வு, அரச காணி தொடர்பான பிணக்குகளில் பிரதேச செயலர்களுடன் இணைந்து செயற்பட பொலிஸார் தவறுகின்றமை ஆகிய விடயங்களும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு விற்பனை மிகப் பிரதான பிரச்சினையாக உள்ளதாகவும் அங்கு கசிப்பு விற்பனையில் ஈடுபடும் குடும்பங்கள் தொடர்பான விவரங்களை திரட்டியுள்ளபோதிலும் நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்கள் நிலவுதாகவும் மாவட்டச்செயலர் குறிப்பிட்டார். அதேபோன்று சட்டவிரோத மணல் அகழ்வு, மரம் மற்றும் கால்நடைகள் கடத்தல் என்பனவும் முல்லைத்தீவில் அதிகளவில் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு பெரும் பிரச்சினையாக உள்ளதாகவும், கல்லாறை அண்மித்து காட்டை அழித்து மணல் அகழ்வு நடைபெறுகின்றது எனவும் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

அங்கு அகழப்படும் மண்ணை விற்பனைக்காக சேகரித்து வைக்கும் இடத்துக்கு கொண்டு வரப்படும் பாதையில் பொலிஸ் காவலரண் அமைப்பதன் ஊடாக இதனைத் தடுக்கலாம் என்றும், கௌதாரிமுனை கடற்கரைக்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகளவு இளையோர் வருவதாகவும் அங்கு மதுபானம் அருந்திவிட்டு சண்டைகளில் ஈடுபடுகின்றனர் எனவும் இவற்றைக் கையாள அங்கு பொலிஸ் காவலரண் அங்கு அமைக்கப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், பாடசாலை மாணவர்களுக்கு பச்சைகுத்தும் நிலையங்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பெலியத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்படும் நபரை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. எப்போதாவது அவர் ஜேவிபியின்ன் செயற்பாட்டு ரீதியான உறுப்பினராக இருந்தாரா என்பதையும் கண்டறியவில்லை. ஆளும்தரப்பின் ஆதரவுடன் போதைப்பொருள் கொண்டு வரப்படுவதோடு, அவை தொடர்பான சோதனைநடவடிக்கைகளும் ஆளும்தரப்பின் ஒத்துழைப்புடனே மேற்கொள்ளப்படுவதாக நிலவும் பொதுவான சூழ்நிலையின் அடிப்படையில் தெரிவித்திருந்தேன்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்களைக் கொண்டே பெலியத்தே சனா என குறிப்பிடப்படும் நபர் போதைப்பொருள் கடத்தப்பட்ட படகின் உரிமையாளர் எனத் தெரிவித்திருந்தேன். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் காலப்பகுதியில் அரசுத் தலைவர் அப்பகுதிக்கு வருகைதந்திருந்த சமயத்தில் பெலியத்த சனா என்பவரின் வீட்டில் உணவருந்தினார் என்று தெரிவிக்கவில்லை. அப்பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றிலேயே உணவருந்தினார் எனக் குறிப்பிட்டிருந்தேன். மேற்படி சந்தேகநபரை கைது செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்ட நிலையில் அது ஆளும்தரப்பின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டதாக நான் நம்பினேன் எனவும் தெரிவித்திருந்தார்.

எவ்வாறெனினும், 2025.10.2 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்த கருத்துக்களை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்கள் எதனையும் குற்ற விசாரணைப் பிரிவில் முன்வைக்கத் தவறியுள்ளார்.

தான் கூறும் விடயம் பெ ய்யென அறிந்தும் ஊடகங்களில் உறுதிப்படுத்தப்படாத தகவலை வெளிபடுத்தியமை தொடர்பில் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தி உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அதிகாரிகள் தயாராக உள்ளனர் என்றுள்ளது.

## இருப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது மக்கள் விடுதலையின் பொலிஸா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொலிஸ் கடந்த காலங்களில் இவ்வாறு செயற்பட்டதில்லை. மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் பொலிஸ் சேவையை பொலிஸ் மா அதிபர் அரசியல்மயப்படுத்தியுள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் தங்காலை பொலிஸார் என்னை அழைத்து வாக்குமூலம் பெற வேண்டிய அவசியம் கிடையாது. நான் அந்த நபருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பையே வெளிப்படுத்தினேன். ஊடகங்களுக்கு அதனையே வெளியிட்டேன்.

ஸ்ரீ லங்கா பொலிஸ் மிகக் கீழ்த்தரமான முறையில் செயற்படுகிறது. எதிர்க்கட்சிகளுக்கு எதிரான ஆளும்தரப்பின் அடக்குமுறைகளின் பிரதானியாகவே பொலிஸ் மா அதிபர் செயற்படுகிறார். ஆளும்தரப்பின் முறைகேடான செயற்பாட்டைத் தொடர்ந்து வெளிப்படுத்துவேன். பொலிஸாரைக்கொண்டு எம்மை அச்சுறுத்த முடியாது என்றார்.

## நைஜீரிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 2000 இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தோஷ் ஜா, பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்கவுள்ளனர்.

மலையகப் மக்களுக்கு மிகவும் பாதுகாப்பான வீடொன்றினை உரித்தாக்கல் திட்டத்தின் கீழ் ‘மலையம் மகிழ்ச்சி‘ என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. ‘மலையக மலர்ச்சி‘ என்ற தொனிப்பொருளின் கீழ் மலையக மக்களின் தனி வீட்டுக்கான கனவை நினைவாக்குவதற்கான இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்திய ஆளும்தரப்பின் நான்காம் கட்ட வீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 4,700 வீடுகளை நிர்மாணிப்பதற்கான தொடக்கப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய 3,000 மில்லியன் ரூபா வீட்டுநிர்மாணத்துக்காகவும், 500 மில்லியன் ரூபா அந்த வீடுகளை அண்மித்த அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நான்காம் கட்டத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக 10,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அவற்றில் 1,300 வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு அவை நிறைவடையும் தருவாயிலுள்ளன. இவ்வாண்டுஇறுதியில் அதனை முழுமையாக நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 8,700 வீடுகளில் 4,700 வீடுகளின் நிர்மாணப்பணிகளை இவ்வாண்டில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் தொடக்க கட்டமாகவே 2000 வீடுகளுக்கு உரித்துக்கான ஆவணம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கமைய, மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயமுடைய பிரதேசங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு முதற்கட்டமாக அவர்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். 3000 40000 குடும்பங்கள் மண்சரிவு ஏற்படக்கூடிய அதிக அபாயமுள்ள பிரதேசங்களில் வசிக்கின்றனர் என்று குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய மண்சரிவு அபாயம் மிக்க வலயங்களில் வசிக்கும் 406 குடும்பங்களுக்காக வீடுகளை அமைக்க ஆளும்தரப்பினால் 1,300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டும் இவ்வாறு 1,300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

## காரைதீவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை தவிசாளரிடம் கையளித்தார்.

இங்கு நிலைகொண்டிருந்த சுமார் 50 இராணுவத்தினர் கல்முனை இராணுவ முகாமிற்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

காரைதீவு கிராமம் 1985, 1988, மற்றும் 1990களில் பெரும் வன்முறைக்கு இலக்காகி பெரும் அழிவைச் சந்தித்திருந்தது. அதனால் 1988இல் இருந்து இங்கு படை முகாம் அமைக்கப்பட்டது. இராணுவம், விசேட அதிரடிப்படை, இந்திய அமைதி காக்கும் படை மற்றும் உளவு பிரிவினர் என்று மாறி மாறி 38 வருடங்களாக இது அரச படைகளின் முகாமாக இருந்து வந்திருக்கிறது. இப்போது படையினர் இங்கிருந்து முற்றாக அகற்றப்பட்டுள்ளனர்.

இருந்த பொழுதிலும் தேசிய புலனாய்வு பிரிவினர் மற்றும் 3 இராணுவத்தினர் இன்னும் ஒருவாரகாலத்திற்கு அங்குள்ள வாழிடங்களில் தங்கி இருப்பார்கள் என்று கூறப்படுகின்றது.

கரைதீவு இராணுவ முகாம் அகற்றப்படுவது தொடர்பாக கல்முனை பிராந்திய கட்டளை தளபதி எங்களை வெள்ளிக்கிழமை மாலை அழைத்து எங்களிடம் அந்த பத்திரங்களை கையளித்தார். இப்போது இங்கு தங்கியுள்ள புலனாய்வுப் பிரிவினரும் விரைவில் அகன்று விடுவார்கள் என்று காரைதீவு பிரதேச செயலாளர் எந்திரி அருணன் தெரிவித்தார்.

இதேவேளை, 'காரைதீவு இராணுவ முகாம் அகற்றப்பட்டிருக்கக் கூடாது. எமக்குப் பாதுகாப்பு இல்லை. எனவே பொலிசாராவது அங்கு நிலைகொள்ளவேண்டும்' என்று ஒரு சாரார் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இன்னும் சிலர் 'இந்த முகாம் அகற்றப்படுவதனால் பிரதேச சபைக்குரிய வருமானம் அதிகரிக்கும். பிரதேச செயலகத்தின் ஒரு பகுதி இங்கும் இயங்கலாம். பிரதேச சபை வருமான ஏற்பாடுகளையும் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# ரூபா 7.5 கோடி நிதியில் படகுப் பாதை குறிஞ்சாக்கேணியில் அமைக்க ஏற்பாடு





(அய்யாஸ்)

கிண்ணியாவையும் குறிஞ்சாக்கேணியையும் இணைக்கும் பாலம் நிர்மாணிக்கும் வரை மாற்றுப் படகு பாதை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் அவற்றுக்கான உபகரணங்கள் நேற்று குறிஞ்சாக்கேணிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் கிண்ணியா பிரதேச அமைப்பாளர் ராபிக் தலைமையின் கீழ் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த அவர், கடந்த காலத்தில் இந்த பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது எனினும் கடந்த கால ஆளும்தரப்பினால் இதனை செய்ய முடியாது எனத் தெரிந்தும் இப்பால நிர்மாணப் பணியைத் தொடங்கி பெரும் விபத்து ஏற்பட்டது. அந்த வகையில் குறிஞ்சாக்கேணிப் பால நிர்மாணப் பணி தொடங்குகின்ற போது இதற்கான ஒரு மாற்றுப் பாதையை தெரிவு செய்யாமல் விட்டதன் காரணமாக சுமார் எட்டு உயிர்கள் காவு கொல்லப்பட்டன.

எங்களுடைய ஆளும்தரப்பு பாலம் நிர்மாணிக்கின்றபோது மக்களுக்கான மாற்றுப் பாதையினை தெரிவு செய்து அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்தது. சுமார் 7.5 கோடி ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்து மாற்றுப்பாதைக்கான வழியினை செய்து தந்திருக்கிறார்கள். அந்த மாற்று பாதைக்கான படகு சேவை ஆரம்பிப்பதற்கான படகுகள் இன்று தரிவிக்கப்பட்டுள்ளன.

இன்னும் ஓரிரு நாட்களுக்குப் பின் அந்த படகு பாதை சேவை மக்களின் பாவனைக்கு விடப்படும். சிறந்த தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இரு பகுதி மக்களும் நன்மை அடைவது மட்டுமின்றி ஏனைய மக்களும் நன்மை அடைய உள்ளார்கள் என தெரிவித்தார்.




# பிரதிப் பொலிஸ் மா அதிபர் வவுனியாவில் பதவியேற்பு

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக இந்திக்க கப்பு கொட்டுவ மதத்தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் கடமைகளைப் நேற்று பொறுப்பேற்றார்.

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக செயற்பட்டு வந்த சாமந்த விஜயசேகர மேல் மாகாணத்தின் தெற்கு பிரிவுக்கு பொறுப்பாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில், வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபராக போக்குவரத்து பிரிவுபொறுப்பதிகாரியாக செயற்பட்டு வந்த இந்திக்க கப்பு கொட்டுவநியமிக்கப்பட்டுள்ள இவர் மதத்தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் கடமைக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.







## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இலங்கையை வாட்டும் மருந்து நெருக்கடி

இலங்கையின் சுகாதாரத் துறை இன்று கடுமையான மருந்துத் தட்டுப்பாட்டின் ஆழத்தில் சிக்கியுள்ளது. மருத்துவமனைகள் முழுவதும் நோயாளிகள்தேவையானமருந்துகளைப்பெறமுடியாமல்அவதிப்படுகின்றனர். அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) தற்போது நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளை உள்ளடக்கி இது தொடர்பில் ஒரு விரிவான ஆய்வை ஆரம்பித்துள்ளது. இதன் நோக்கம் – இந்த மருந்து நெருக்கடியின் உண்மையான அளவைத் துல்லியமாக கணக்கிடுவது.

மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சாமில் விஜேசிங்க,'அத்தியாவசிய மருந்துகள் கிடைப்பது நிலையற்றதாகவும் கணிக்க முடியாததாகவும் மாறியிருக்கிறது. ஒரு நோயாளி சிறந்த சிகிச்சையைப்பெற உரிமைபெற்றவர்; ஆனால் அது மருந்து கிடைப்பதில்தான் அமைகிறது. இப்போதைய நிலை ஏற்றுக்கொள்ள முடியாதது,' என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

### சீர்கேட்டின் வெளிப்பாடு

இன்று ஒரு மருத்துவமனையில் காலை நேரத்தில் மருந்து கிடைக்கலாம்; ஆனால் மாலையில் அது இல்லாமல் போகிறது. அதே மாவட்டத்திலுள்ள இரண்டு மருத்துவமனைகளுக்குள்ளும் பெரும் வேறுபாடு காணப்படுகிறது. இது ஒரு சிறு தவறு அல்ல – இது முழு அமைப்பின் தோல்வி. மருந்துகள் விநியோகிக்கும் முறைமையே ஒழுங்கற்றதாக மாறியுள்ளதைக் காட்டும் கடுமையான சமிக்ஞை இது.

### பொறுப்பிலிருந்து தப்பும் அதிகாரிகள்

இந்த அவசர நிலையிலும் சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸாவோ, அவரது துணை அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனியோ பதில் அளிக்கத் தயங்கியுள்ளனர். சுகாதார சேவைகளின் பணிப்பாளர் மருத்துவர் அசெல குணவர்தன, மருந்து விநியோகப் பிரிவு (MSD) அதிகாரிகள் மருத்துவர் தெதுனு டயஸ் மற்றும் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க ஆகியோரும் கருத்து கூற மறுத்துள்ளனர்.

இந்த மௌனம் அரசின் பொறுப்பின்மையின் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.

### தோல்வியின் வேர்மூலம்

மருத்துவர் விஜேசிங்கவின் கூற்றுப்படி–'மருந்து பற்றாக்குறையின் காரணம் ஒரு சாதாரண விபத்து அல்ல; இது அரசின் மருந்து கொள்முதல் அமைப்பில் ஏற்பட்டுள்ள சீர்கேடு.'

தொடர்ச்சியான திறமையின்மை, ஒருங்கிணைப்பின்மை, மற்றும் நிர்வாக அலட்சியம் ஆகியவை இந்த நெருக்கடியின் மூலக்காரணங்களாகக் கூறப்படுகின்றன.

அரசின்கொள்முதல்செயல்முறைகளைமேற்பார்வைசெய்யும்அதிகாரிகள் கடந்த ஒரு வருடமாக எந்த மாற்றமும் இன்றித் தொடர்கின்றனர். எந்த மாற்றமுமில்லை. மருந்துத் தட்டுப்பாட்டிலும் எந்த முன்னேற்றமுமில்லை.

### பொதுமக்களின் கோபம்

'நோயாளிகளைச் சந்திப்பது அமைச்சர்கள் அல்லர். நாங்கள்தான்,' என்கிறார் மருத்துவர் விஜேசிங்க. அவரது வார்த்தைகள் ஆழம் நிரம்பியவை.

மருந்து இல்லாமல் நோயாளிகளை நம்பவைத்தல் என்பது மருத்துவரின் மனநிலையையும் சுகாதார சேவையின் நம்பகத்தன்மையையும் தகர்க்கிறது. மக்கள் மருத்துவர்களிடம் கோபம் காட்டுகிறார்கள்; ஆனால் உண்மையான குற்றவாளி நிர்வாகத்தின் மேல்நிலைப் பிரிவில் இருப்பவர்கள்.

### ஆபத்தான சூழல்

இன்று காய்ச்சல், சளி, நிமோனியா, டெங்கு, மற்றும் சர்க்கரை நோய்களுக்கான முக்கிய மருந்துகள் பல இடங்களில் இல்லாமல் போயுள்ளன. இதனால் சிறு குழந்தைகள், முதியவர்கள், மற்றும் தொற்றுநோயாளிகள் உயிர் ஆபத்தில் உள்ளனர்.

மருந்துத் தட்டுப்பாடு என்பது வெறும் பொருளாதார பிரச்சனை அல்ல இது மனித உயிர்களின் கேள்வி.

### அரசின் செயலற்ற தன்மை

சுகாதார அமைச்சு இந்த நெருக்கடியை நீண்ட காலமாகப் புறக்கணித்து வருகிறது. தற்காலிகத் தீர்வுகள், அவசர கொள்முதல் நடவடிக்கைகள், மற்றும் வெளிநாட்டு உதவிகளை உடனே பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் அரசின் மந்தநிலை, அலுவலக சிக்கல்கள், மற்றும் பொறுப்பைத் தவிர்க்கும் அரசியல் கலாசாரம் இந்த நெருக்கடியை ஆழப்படுத்தியுள்ளது.

இது வெறும் நிர்வாகத் தவறல்ல; இது ஒரு அரசியல் குற்றம்.

### மறுசீரமைப்பு அவசியம்

இதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைக்கும் இரண்டு கட்டத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். முதற்கட்டமாக அவசரமாகத் தேவையான மருந்துகளை வெளிநாடுகளில் இருந்து கொள்முதல் செய்யவேண்டும். இரண்டாவது கட்டத்தில், முழு மருந்து விநியோக அமைப்பையும் நவீன டிஜிட்டல் கண்காணிப்பு முறைக்கு மாற்றவேண்டும்.

நோயாளி மருந்துக்காக அரசு மருத்துவமனையின் வழிச் சாலையில் காத்திருக்க வேண்டிய நிலை, ஒரு நாகரிக நாட்டுக்கே அவமானம்.

இது வெறும் மருந்துப் பற்றாக்குறை அல்ல; இது ஓர் அரசியல் பொறுப்பின்மையின் அறிகுறி.

மருந்துகள் கிடைக்காத நாடு, நீதியும் நம்பிக்கையும் இழந்த நாடாக மாறும்.

இப்போது ஆளும்தரப்பு செய்ய வேண்டியது ஒன்றே – நோயாளியின் உயிரை அரசியல் மேலாண்மைக்கு மேலாக வைப்பது.

# முத்துநகர் விவசாயிகள் கைது




திருகோணமலை முத்து நகர் விவசாயிகளை சீனக் குடா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.குறித்த விவசாயிகள் முத்துநகர்வயல்நிலபகுதியின் சூரிய மின் சக்திக்குஒதுக்கப்பட்ட காணியை விடுத்து அண்மித்த காணியில் உழவு இயந்திரத்தை கொண்டுவிவசாய நடவடிக்கைக்காகதரையைபதப்படுத்தும் போது அத்து மீறி தனியார்காணிக்குல் நுழைந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

இதில் ஐந்துக்கும் மேற்பட்ட விவசாயிகளை உழவு இயந்திரம் மோட்டார்சைக்கிள்உள்ளிட்டவற்றையும் கையகப்படுத்தியதாக தெரிதவருகிறது. அண்மையில் விவசாய காணி அபகரிக்கப்பட்டதையடுத்து தொடர் சத்தியாக் கிரகபோராட்டத்தை குறித்த முத்து நகர் விவசாயிகள் நடாத்தி வருகின்றனர்.தற்போது தனியார் காணி எனவும் உரக் கம்பனி ஒன்றுக்கு சொந்தமான காணி எனவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இச் சம்பவம் இடம் பெற்றதாகதெரியவருகிறது.

அண்மையில் நாடாளுமன்றிலும் ஊடகங்களிலும் முத்து நகர்விவசாய காணி அபகரிப்பு தொடர்பில் பெரும் பேசு பொருளாகியுள்ளது. இந்தநிலையால் எஞ்சிய காணியில் விவசாயம் செய்யலாம் என ஆளும் கட்சிபிரதியமைச்சர் பேசியதால் நெற் செய்கைக்கான தயார்படுத்தலை மேற்கொண்டதாகவிவசாயிகள் இதன்போது தெரிவித்தனர்.

# சாய்ந்தமருது பொது நூலக வாசகர் வட்டம் சீரமைப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பொது நூலக வாசகர் வட்டத்தின் நிர்வாக புனரமைப்புக் கூட்டம்நூலகர் முஸ்தாக் தலைமையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸாஹிரின் வழிகாட்டலில் நூலகத்தின் உஷாத்துணைப் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக நூலகர் முஸ்தாக், உப தலைவராக ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் பீர் முஹம்மது, செயலாளராக வானொலி அறிவிப்பாளர் அன்சார், உப செயலாளராகஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் சஹறூன், பொருளாளராக விரிவுரையாளர் றியாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசகர்களாக ஓய்வுபெற்ற ஆசிரியர் முஹம்மத், ஊடகவியலாளர் ஜுனைதீன், ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர் எஸார் மீராசாஹிப் ஆகியோரும், நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் ஆதம்பாவா, ஊடகவியலாளர் சம்சுதீன், ஆசிரியர் முஹம்மது ஜஃபர், கவிஞர் அஸீஸ் மற்றும் இஸ்ஸதீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது நூலகத்தின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டு, பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன்வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் மற்றும்வாசிப்புப் போட்டிகள், பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவைசம்மந்தமாக கருத்துகள் பரிமாறப்பட்டன.



# பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி கூட்டம்

(ஹாரீஸ்)

2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் உளச் சமூக ஒன்றிய கூட்டமானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் ஒக்டோபர் 07 பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் சமூகத்தில் அவர்களின் பங்கு மிக முக்கியமானது எனவும், பிரச்சினைகளை எதிர்கொள்ள எவ்வாறு செயற்பட வேண்டும், அது தொடர்பிலான தீர்மானங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டது.





இந்நிகழ்விற்காக நிதி பங்களிப்பினை சிறுவர் நன்னடத்தை திணைக்களம் வழங்கியிருந்தது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சீ. நிருபா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ. சிவம், நிருவாக கிராம அலுவலர் மனோஜ் இந்ரஜித், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச நிறுவனங்களான கோட்டக்கல்வி அலுவலகம், சுகாதார வைத்திய பணிமனை, சிறுவர் நன்னடத்தை அலுவலகம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் கல்முனை ஆதார வைத்தியசாலை உளநல பிரிவு மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அரச சார்பற்ற நிறுவனங்களான ஸ்வாட், இஸ்லாமிக் ரிலீப் போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# வேப்பங்குளம் வீட்டுத் திட்ட பயனாளிகள் வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டு திட்டத்திற்கு செல்லும்பாதையால் கனரக வாகனங்கள் செல்வதால் வீதி சேதம் அடைவதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள கருங்கல் குவாரி ஒன்றிலிருந்து தினமும் 60 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்கள் சென்று வருவதனால் சிறிய வீதியாக உள்ள குறித்த வீதி தற்போது சேதமடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் மாற்றம் அடைந்து இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியின் ஊடாக கனரக வாகனங்கள் செல்வதை அனுமதிக்க வேண்டாம் எனத் தெரிவித்தும், டிப்பர்களால் அதிகரித்துள்ள விபத்துக்களைக் கட்டுப்படுத்தக் கோரியுமே அவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஓமந்தை வேப்பங்குளம், விளாத்திக்குளம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் வீதியை ஊடறுத்துச் செல்லும் தொடருந்துப் பாதையில் பாதுகாப்பு கடவையின்மை மற்றும் தொடருந்து செல்கின்றபோது சமிக்ஞைகள் இல்லை எனவும் இதன்போது தெரிவித்திருந்ததுடன் அதனை அமைக்கவேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர்.



மக்களின் போராட்ட இடத்திற்கு வருகை தந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடியதோடு இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சரோடு தான் கலந்துரையாடுவார் எனவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அரசுத் தலைவரிடம் கையளிக்கும் வகையில் ஒரு மனுவும் கையளிக்கப்பட்டிருந்தது.

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(ஹாரீஸ்)

தேசிய சிறுவர் வாரத்தினை முன்னிட்டு நாவிதன்வெள பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் வழிகாட்டலிற்கமைவாக சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதில் சமயத் தலைவர்களின் பொறுப்புகள் எனும் தொனிப்பொருளிலான நாவிதன்வெள பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆலயங்களின் அறங்காவலர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கானது ஒக்டோபர் 08 மத்தியமுகாம்-01 கிராம அலுவலர் பிரிவிலுள்ள வாணி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெள பிரதேச செயலக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நீலேந்திரன் தலைமையிலும்சறோஜினிபாலசுந்தரம்ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாணி அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் சித்திரகுமார், சித்திவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் ஜெயசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிராமிய சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் கலாசார விழுமியங்கள் தொடர்பில் கருத்துகளும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## உலக உளநல தினத்தினை முன்னிட்டு விசேட நிகழ்வு

(வசந்தன்)

உலக உளநல தினத்தினை முன்னிட்டு வவுனியா உளநல சங்கத்தின் ஏற்பாட்டில் "அபாயங்களிலும் அவசர நிலையிலும் - அனைவருக்கும் மனநல சேவைகள்" எனும்தொனிப்பொருளில்விசேட நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

வவுனியா மாநகர சபை திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரோட்நிறுவன மாணவ, மாணவிகளினால் கலை நிகழ்வுகள் இடம்பெற்றது.மேலும் உலக உளநல தினத்தினை முன்னிட்டு பயனாளிகளின் பிள்ளைகளுக்கிடையில்நடாத்தப்பட்ட வினாடி வினா, கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற25 மாணவர்களிற்கு வெற்றி கேடயங் களும், சான்றிதழ்களும் வழங்கிவைக் கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வவுனியா மாநகர சபை மேயர் காண்டீபன், வவுனியா வைத்தியசாலைபணிப்பாளர் செந்தூர் பதிராஜா, உள நல வைத்திய நிபுணர் மதுசி செனவிரத்ன,வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல வைத்தியர் சி.சுதாகரன் மற்றும்வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், அரச திணைக்கள அலுவலளர்கள்,வரோம் நிறுவன பங்குத்தந்தை, வரோட் நிறுவன உத்தியோகத்தர்கள், மாணவர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## திரௌபதை அம்மன் தீமிதிப்பு

(சக்திவேல்)

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயவருடாந்த தீமிதிப்பு பல்லாயிரக்கணக்கானபக்தர்கள் புடை சூழ நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது.



மகா பாரதக் கதையினை மையமாக கொண்டு பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயஉற்சவம் 18 தினங்கள் நடைபெறுவது வழக்கமாகும். செப்டம்பர் 23 திருக்கதவு திறத்தல், கொடியேற்றத்துடன் ஆலய உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இவ் உற்சவத்தில்பாண்டவர்கள்நாடுநகர்இழந்து வனவாசம் செல்லும் நிழ்வு, அருச்சுனன் தவநிலை செல்லல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாண்டவர்கள், திரௌபதை , கிருஷ்ணர் தேவாதிகள் தீ மிதிப்பில் ஈடுபடும்நிகழ்வு இடம்பெற்றதோடு இன்றைய நாள்தீக்குழிக்கு பால்வார்க்கும் பாற்பள்ளயம் சடங்குடன் உற்வம் நிறைவுபெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2025இல் வெளியிடப்பெற்றது